**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No. 118/2022**

**PW6**

| | | |
|---|---|---|
| Name | : | ரவி |
| Father's/Husband's Name | : | தொப்பை |
| Village | : | வீரானந்தல் |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.08.2025.

Accused A1,2, 4 - 7 present.

**முதல் விசாரணை**

நான் கரிமலைபாடி கிராமத்தில் வசித்துவருகிறேன். என் சொந்த ஊர் வீரானந்தல். கல்வித்துறையில் லேப்அசிஸ்ட்டன்டாக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளில் 7ம் எதிதி விஜியா மற்றும் அவர் மகன் 1ம் எதிரி மதி ஆகியோரை தெரியும். இறந்து போன வெங்கடேசனை எனக்குஅண்ணன் மகன் ஆவார். கடந்த 17.09.2021 அன்று வெங்கடேசன் என்பவர் இறந்த செய்தி கேட்டுசென்று இறந்துபோன வெங்கடேசனின் தந்தை முருகனுடன் காவல் நிலையம் சென்றேன்.மருத்துவமனைக்கு சென்று நான் எதுவும் கையொப்பம் செய்யவில்லை. இறந்த போன வெங்கடேசன் உடலை மருத்துவமனைக்கு சென்று நான் பார்க்கவில்லை.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 18.09.2021 அன்று இறந்து போன வெங்கடேசன் தந்தை முருகன் என்பவர் எனக்கு தொலைபேசியில் எனது மகன் வெங்கசேடன் வெட்டு பட்டு இருப்பதாக எனக்கு தகவல் சொன்னவுடன் எனது உறவினர்களுடன்

மருத்துவமனைக்கு சென்று வெங்கடேசனை பார்த்தபோது உடல் முழுவதும் பலத்த வெட்டு காயத்துடன் ரத்த வெள்ளத்தில் இருந்தவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்று திருவண்ணாமலை மருத்துவமனையில் சேர்த்து காயம் பட்ட வெங்கடேசனை பரிசோதித்த மருத்துவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக சொன்னார். அதன் பேரில் வழக்கு பதிவு செய்துள்ளதாக அறிந்தேன் . பின்னர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனை சவக்கிடங்களில் இருந்த வெங்கடேசன் உடல் மீது செங்கம் காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தார் என்றும் பஞ்சாயத்தார்களுடன் நானும் இருந்தேன் என கூறிவிட்டு தற்போது சாட்சியத்தை மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.